22 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும் ACC-NO-10813 ஆசிரியர் :
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலே, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 20-3-33

விராட் ரூப வில்லிங்டன்!

ஹா ! எத்தனை கைகள் ! என்ன மகா சக்திகள் ! வெள்ளைக் கடுதாசி யின் பயனாக இந்திய வைஸ்ராய்க்கு எவ்வளவு ஸர்வாதிகாரங்கள் தரப் பட்டு விட்டன !

1. இந்தியாவின் அமைதி காக்க,

2. சர்க்கார் நாணயம் காக்க,

3. சிறு மைனாரிட்டியை ரக்ஷிக்க,

4. சமஸ்தானங்களைக் காக்க,

5. வியாபாரங்களைக் காக்க,

6. சட்ட சபையைக் கூடச் செய்ய ஒத்தி வைக்க, கலைத்து விட,

7. அவசரச் சட்டங்களிட என்ப வை போன்ற புற்பல ஸர்வாதிகாரங் கள் இந்திய வைஸ்ராய்க்கு தரப்பட்டு விட்டன.

வெள்ளைக் கடுதாசி என்ற வரப் பிரசாதத்தினால் தமக்குக் கிடைத்த விராட் ஸ்வரூபத்தைப் பார்த்து வில்லிங்டனே ஆச்சரியப் படுவாரன் றோ! இது வரை சாதாரண உரு வத்தோடிருந்த வைஸ்ராய் இனி விச்வரூபத்தோடு ஆட்சி செய்யப் போகிறார் !



கொள்ளைக் வெள்ளைக் கடுதாசி

சென்ற 18ம் தேதியன்று இந்தியா வெங்கும் பிரசுரிக்கப்பட்ட வெள்ளைக் கடுதாசியால் யாருக்கு என்ன பயனென்று கேட்கலாம். அன்று காலை பத்திரிகைகளுக்கு அநுபந்தம் போட்டுக் காகக பண்ணியது, பத்திரிகைக்காரர்கள் கை மேல் கண்ட பலன்! அது தவிர வேறெதுவும் பயனில்லை. மேற்படி கடுதாசியில் என்னதான் இருக்கிறதென்று கண்டு பிடிக்க அந்த 119 பக்கங்களையும் 'பீடிகை' முதல் 'முற்றிற்று' வரையில் நாம் ஊடுருவிப் பார்த்தோம். கற்கண்டு கேட்ட குழந்தைக்கு கல்லைக் கொடுத்த கதையாகவே அது முற்றிலும் இருந்தது.

இனிமேல் வரப் போகும் அரசியல் இந்திய ராஜ்யமு மன்று; பிரிட்டிஷ் ராஜ்யமு மன்று; அது வைஸ்ராய் ராஜ்யமே யென்பது விளங்கிற்று. வெள்ளைக் கடுதாசி இந்தியர்களை உத்தேசித்து பிரசுரிக்கப்பட்டதன்று என்பதும், அது பிரிட்டிஷ் மண்டைக் கிறுக்கர்களுக்கும், சர்ச்சில் போன்று குலைப்பவர்களுக்கும் தரப்பட்ட ஓர் வரப் பிரசாதம் என்பதும் வெகு நன்முக விளங்கிற்று. பிரிட்டிஷார் இத்தனை நாள் வெறுமனே இந்தியாவைக் கைக்குள் வைத்துக் கொண்டிருந்தனர். வெள்ளைக் கடுதாசி அமுலுக்கு வந்ததும் இந்தியாவை இரும்புக் கையினுல் இறுக்கிப் பிடிக்கப் போகிறர்க ளென்பதும் பசு மரத்தாணி போல் பதிந்து விட்டது. இந்த 'சுவேத பத்திரம்' வெள்ளையர்களுக்கு வரப் பிரசாதமே!

உண்மையாகப் பிறந்த இந்திய னெவனும் இந்த வெள்ளைக் கடுதாசியைப் பற்றி துளியாவது கவலைப்படப் போவதில்லை. ஏனெனில் தலைவர் காந்தியடிகளும், காங்கிரஸ் வீரர்களும், தேசபக்த திலகங்களும் கண்காணு இடத்தில் அடைக்கப்பட்டு கிடக்கும்போது இந்திய அரசியலைப் பற்றிய எதையும் பற்றி பேசுவதற்கோ, எதையும் நடத்துவதற்கோ யாருக்கு உரிமை யுண்டு? போகின்ற ரீதியைப் பார்த்தால் மிதவாத வௌவால்களின் கண்களையும் இந்தக் கடுதாசி திறக்குமென்றே நாம் நினைக்க வேண்டி யிருக்கிறது. இப்போதும் மிதவாதிகளுக்கு கண்கள் திறக்கப்படாவிட்டால் அவர்களை ஈசன் தான் காக்க வேண்டும். கொள்ளைக் கடுதாசியைச் சீண்டுபவர்களும் கொள்ளையர்களே யன்றே!

விராட் ரூப வில்லிங்டன்!

இத்தாலியில் முஸ்ஸோலினி என்ற சர்வாதிகாரி வைத்ததே சட்டமா யிருக்கிறது. அதே மாதிரி ஜர்மனியில் ஹிட்லர் என்பான் நடத்தப் போகும் கெடு பிடி ராஜ்யமும் அந்தகைய சர்வாதிகாரமே! ஆனுல் இந்த இருவரின் சர்வாதிகாரத்தை விடப் பன்மடங்கு சர்வாதிகாரத்தை இந்திய வைஸ்ராய்க்கு வெள்ளைக் கடுதாசி தந்திருக்கிறது. இத்தாலியிலும், ஜர்மனியிலும் உள்ள அந்த சர்வாதிகாரிகள் தங்கள் நாட்டை ஆள்பவர்களாதலால் நாட்டின் நலத்தைக்கோரி அதிகாரம் செலுத்துவார்கள். ஆனுல் இந்தியாவிலோ, அந்நிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வைஸ்ராய்க்கு இந்தியர்களை அடக்கியாள்வதற்காகவே யதேச்சாதிகாரங்களன்றே!

1. இந்தியாவின் அமைதியைப் பாதுகாக்க,
2. தேசத்தின் கடன்—நாணயத்தை காக்க,
3. சிறு பான்மைக் கூட்டத்தினரை ரக்ஷிக்க,
4. சுதேச சமஸ்தானங்களைப் பாதுகாக்க,
5. வியாபார விஷயங்களைக் காக்க,
6. சில இலாக்காக்கள் சீர் கெடாமலிருக்க,
7. சட்ட சபையை வேணுமென்றுல் கூடும்படி செய்யவும், ஒத்தி வைக்கவும், வேண்டாமானுல் அடியோடு கலைத்து விடவும்,
8. மசோதாக்களைத் தடை செய்யவும்,
9. அவசரச் சட்டங்களைப் போடவும்,

இவ்வாறு பல விஷயங்களில் இந்திய கவர்னர் ஜெனரலுக்கு சர்வாதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (வெள்ளைக் கடுதாசி முன்னுரை, பிரிவு 26, 30, 33.)

சிருட்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தா வென்று கடவுளை வர்ணிப்பார்கள். ஆனுல் அரசியல் துறையில் கடவுளுக்கும் மேம்பட்ட சக்திகளையும் இந்திய வைஸ்ராய்க்குத் தந்திருக்கின்றுர்கள். இத் மட்டு மன்று.

வைஸ்ராயின் சம்பளத்தில் ஒரு தம்பிடியைத் தொடுவதற்கும் சட்ட சபைகளுக்கு அதிகாரமில்லை யென்று வெள்ளைக் கடுதாசி கர்ஜித்திருக்கிறது. என்ன போகம்! என்ன பாக்யம்! இப்பேர்ப்பட்ட மகத்தான பெடரல் கவர்னர்-ஜனரல் உத்யோகத்தை அநுபவிக்க, முதன் முதலில் கொடுத்து வைத்தவர் வில்லிங்டன் பிரபுவே யாகும். வில்லிங்டனின் விராட் ஸ்வரூபத்தைக் கண்டு, விச்வரூபத்தைக் கண்டு முஸோலினியும், ஹிட்லரும் மூக்கில் கை வைத்துப் பொறுமைப் படாமல் என் செய்வர்?

காங்கிரஸோடு போட்டியா ?

இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானங்களை அடியோடு நிராகரிக்க வேண்டும் என்ற உத்தேசத்தோடேயே இந்த வெள்ளைக் கடுதாசி பிரசுரிக்கப் பட்டிருக்கிறதோ வென்று சந்தேகப்பட வேண்டி யிருக்கிறது. ஒரு தேசத்தில் ஒருவன் பிறந்தானானல் அவனுக்குப் பிரஜா உரிமைகள் என்று சில உண்டு. பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், வோட்டு சுதந்திரம் முதலியன அந்த மூலாதார உரிமைகளாகும். அவைகளை ஆராய்ச்சி செய்ய காங்கிரஸ் ஒரு தனிக் கமிட்டியை நியமித்துப் பரிசிலனை செய்து ஓர் அறிக்கை வெளியிட்டதை அறிவோம். (சங்கு II ஜன்மம் 15-4-31 இதழ். 2.)

அந்தத் தீர்மானங்களை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடேயே வெள்ளைக் கடுதாசியின் முன்னுரையின் 75 வது பகுதி இருக்கின்றது. "இந்த மாதிரி மூலாதார உரிமைகளைச் சொல்வது தப்பிதமென்று மன்னர்பிரானின் துரைத்தனம் அபிப்பிராயப் படுகின்றது" என்று கடுதாசி சொல்கின்றது. மூலாதார உரிமைகளைச் சொல்லாமல் அரசியல் திட்டம் போடுகின்றார்களாம்! என்னே பிரிட்டிஷ் மூளை!

ஏழைத் தேசமாகிய இந்தியாவில் எந்த உத்யோகஸ்தனுக்கும் மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கக் கூடாதென்று காந்திஜி கூறினாரல்லவா? இந்தியாவின் மீது அநுவசியமாகக் கடன் சுமை ஏற்றப்பட்டுள்ள தென்றும், அக் கடன்களை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் காங்கிரஸ் மகாசபை கோரிற்றல்லவா? அந்த வார்த்தைகளை முறியடிப்பதற்காக வெள்ளைக் கடுதாசி முன்னுரையில் 30-வது பிரிவு போடப் பட்டிருக்கிறது.

"இந்தியக் கடன் விஷயம், கவர்னர் ஜெனரலின் சம்பளம், பெடரல் நியாயஸ்தல சம்பளங்கள், பென்ஷன்கள் இவைகளின் மீது வோட்டு செய்ய சட்ட சபைகளுக்கு அதிகாரமில்லை."

சட்ட சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், "நான் இந்தியச் சக்கிரவர்த்திக்கும், அவரது சந்ததியாருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதாக சத்யம் செய்கின்றேன்" என்று பிரமாணம் செய்ய வேண்டுமென வெள்ளைக் கடுதாசி சொல்கின்றது. அயர்லாந்தில் இந்த ராஜ விசுவாசப் பிரமாணத்தை டீவேலரா காற்றில் விட்டு விட்டான். அந்த மாதிரி நாளைக்கே இந்தியாவிலும் வந்து விடுமோ வென்ற பயம் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டிருப்பது இப்பொழுது நன்ருகத் தெரிகின்றதல்லவா?

பிரித்தாளும் சூழ்ச்சி

ஒருவர் மீது ஒருவரைத் தூண்டி விட்டு ராஜ்யபாரம் பண்ணுவதில் பிரிட்டிஷ் ராஜ தந்திரம் பெயர் போனதாகும். இந்தியாவின் சட்ட சபைகளுக்கு ஜாதி வாரியாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படப்போவது ஜாதிச் சண்டைகளை வளர்த்தே தீரும். ஹிந்துக்களினின்று தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரித்து விட பிரிட்டிஷார் செய்த சூழ்ச்சி தோற்றுப் போனதும், வேருெரு விதத்தில் கக்ஷிப் பிரதி கக்ஷிகளை யுண்டாக்க இந்த வெள்ளைக் கடுதாசி ஏற்பாடு செய்து விட்டது.

இந்தியாவுக்கு இனியும் இரண்டு சட்ட சபைகளேற்படுத்தப் போகிருர்களாம். வங்காளம், ஐக்கிய மாகாணம், பிஹார் முதலிய மாகாணங்களிலும் இரட்டைச் சபைகளிருக்கப் போகின்றனவாம். பணக்காரனென்றும், சாதாரண மானவனென்றும் பிரித்தாள்வதற்கு இதுவுமொரு தந்திரமன்ருே!

" இந்தியாவின் புதிய அரசியலில் இரண்டு சபைகள் இருக்கும். அஸ்ஸெம்பிளியில் 375 அங்கத்தினர்கள் ; அதில் 125 பேர் சுதேச சமஸ்தானங்களி னின்று வந்திருப்பார்கள். ராஜாங்க சபையில் 260 பேர்கள் ; அதில் 100 பேர் சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகளாயிருப்பர்." (முன்னுரை 17 & 18)

சுதேச சமஸ்தானங்களுக்கு இவ்வளவு அதிகமான பிரதிநித்துவம் கொடுத்திருப்பதே ஓர் சூழ்ச்சி. ஏனெனில் சமஸ்தானத்தினின்று வரும் பிரதிநிதிகள் பிரிட்டிஷாருக்கு வால் பிடிப்பவர்களாகவே யிருப்பர். ஆகவே எதையும் சாதித்துக் கொள்வதற்கு சவுகர்யமாகவே சபைகளை பிரிட்டிஷார் நிருமித்துக் கொண்டிருக்கின்றனரென்பது தெரிகிறது.

*   *   *   *

பிரிட்டிஷார் இதுவரை செய்த அரசியல் ஜாலங்கள் ஒன்ரு, இரண்டா? ஸைமன் கமிஷன் வந்தது! லோதியன் கமிட்டி வந்தது! 1, 2, 3 வட்ட மேஜைகள் நடந்தன! இனிமேல் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி தோன்றப் போகிறது. அதே மாதிரி ஜாலங்களில் இந்த வெள்ளைக் கடுதாசியும் ஒரு ஜாலமாகும். இத்தனை கமிஷன்களும், கமிட்டிகளும், கான்பரன்ஸுகளும் குப்பைத் தொட்டி யடைந்தது போல இந்த வெள்ளைக் கடுதாசியும் குப்பைத் தொட்டியை யடையப் போகின்ற தென்பதை தேச பக்தன் நன்கறிவான்.

முத்திரைக் கடுதாசி வரி

ஆட்டுக்கும் மாட்டுக்கும் கூட பண்டைக் காலத்திய இந்திய வேந்தர்கள் நியாயம் வழங்கி வந்தார்களென்று படித்திருக்கிறோம். அக் காலத்தில் குடிகளின் வழக்குகளை ராஜாங்கம் இனமாக விசாரித்ததாகவும் அறிகிறோம். ஆனால் தற்காலத்திய அரசியலிலோ எதற்காவது நியாயம் வழங்கப்பட வேண்டுமென வழக்காடுவதென்றால் சொத்து பூராவையும் ஸ்டாம்புக் கட்டணமாகவே கொடுத்து விட வேண்டியதா யிருக்கிறது. நீதி வழங்க இவ்வளவு கூலியா?

கோர்ட்டுக்குச் சென்று வழக்காடுவதே ஜன்ம சாபல்யமென நினைத்து அதுவே தொழிலாக அலைகின்ற ஜீவன்களுக்கு ஓர் முட்டுக் கட்டை வேண்டியது தான். ஆனால் நீதி வழங்குவதை ஓர் பெரிய வருமானத் துறையாக சர்க்கார் செய்து கொள்வதை எந்த அறிவாளியும் அநுமதிக்க மாட்டான். கோர்ட்டில் வழக்காடுவதை விட சும்மா யிருப்பதே 'லாபகரம்' என்று இப்போதைய நிலை இருக்கிறது.

1922ம் வருஷத்தில் சென்னைச் சர்க்காருக்கு பணமுடை அதிகமாயிருந்த போது ஸ்டாம்புக் கட்டணத்தை,—கோர்ட்டு பீஸை— அதிகப் படுத்தினார்கள். தாற்காலிகமாகவே அக் கட்டணம் உயர்த்தப் பட்டதாகவும் நிலைமை தெளிந்தவுடன் குறைத்து விடுவதாகவும் 17-2-1922ல் ரெவினியூ மெம்பர் சட்ட சபையில் பேசினார். ஒவ்வொரு வருடமும் 'குறைத்து விடுகிறோம், குறைத்து விடுகிறோம்' என்று அதிகாரிகள் சொல்லிக் கொண்டே வந்திருக்கின்றனர். ஆனால் வருஷம் பதினொன்றாகி விட்டது. சர்க்கார் கஜானாவில் பணம் இப்போது வழிந்து ஓடுகிறது. சர்க்கார் உத்யோகஸ்தர்களின் சம்பளங்கள் உயர்கின்றன. ஆயினும் பழைய கறுப்பனே கறுப்பனாக ஸ்டாம்பு கட்டணம் இருந்து வருகிறது. இதைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக அந்த இனத்தின் மான்யத்தில் 100 ரூபா குறைக்க வேண்டுமென்று சென்னைச் சட்ட சபையில் சமீபத்தில் பேச்சு வந்தபோது சர்க்காரில் தற்போது சட்ட மந்திரி உத்தியோகம் பார்க்கும் கிருஷ்ணன் நாயர் துளியாவது பிடி கொடுத்துப் பதில் சொல்லவில்லை. ஆகவே சென்னை சர்க்கார் 1922ம் வருஷத்தில் அளித்த உறுதி மொழியை மென்று தின்று ஜீரணித்து விட்டார்கள். சொன்ன சொல்லை மறப்பதுதான் அரசியலோ?

தாடிகள் எக்ஸிபிஷன்

பண்டிதரும் நாயும்

டெல்லியில் அகில இந்திய வருணாசிரம ஸ்வராஜ்ய சுதர்ம ஸனாதன ஹிந்து மத்திய............ மகா நாடு நடைபெற்றதாம். பிரதிவாதி பயங்கரம் என்பவர் தலைமை வகித்தாராம். வரவேற்புக் கமிட்டியின் அதிகப் பிரசங்கி பேசிய போது, "நாயையும் சமமாகப் பாவிக்க வேண்டியவன் பண்டிதன் என்ற கீதா சுலோகத்தை அடிக்கடி இந்த காந்தி எடுத்துக் காட்டுகிறார். பண்டிதர்களெல்லாம் நாய்களா?" என்று உறுமினாராம். ஐயோ பாவம்! எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் கண்ணபிரான் சொல்லிச் சென்ற வரிகளை காந்திஜி எடுத்துச் சொன்னால் இந்தப் பண்டிதர்களுக்கு தப்பர்த்தம் தோன்றுவானேன்? அட குற்றமுள்ள நெஞ்சுகளா?

டெல்லியில் மடிஸஞ்சிகள்

மறுநாள் சில மடிஸஞ்சிகள் வைஸ்ராயைப் பேட்டி கண்டு குறைகளை யெல்லாம் சொல்லி அழுதார்களாம். "ஆலயப் பிரவேச இயக்கத்தை நடத்துமாறு காந்தி என்ற கைதிக்கு அநுமதி கொடுத்திருப்பது தப்பு" என்று முறை யிட்டார்களாம். சிறையிலுள்ள ஒரு கைதியின் பிரசாரத்துக்கு முன்னால் தங்களால் பிரசாரம் செய்ய முடியவில்லை யென்றால் இந்த யதாபூர்விகள் காட்டுக்கு ஓடிப் போகட்டுமே! ராஜீய காரணங்களுக்காக காந்திஜியைச் சிறையினின்று வில்லிங்டன் பிரபு விடுவித்தாலும், உடனே "கூ...........ஹூ குடி கெட்டது! ஆலயப் பிரசாரம் அதிகமாகுதே! அந்தக் காந்தியை மறுபடியும் சிறையில் போடுங்களேன்!" என்று இந்தப் புண்ணியவான்கள் வைஸ்ராயைக் கேட்டாலும் கேட்பார்கள்! ஏனெனில் அவ்வளவு கருணைக்கிழங்கு மூர்த்திகள் இந்தப் பேர்வழிகள்!

தாடிகள் 'எக்ஸிபிஷன்'

அந்த பேட்டியின் போது வில்லிங்டனுக்கு உச்சி குளிர்ந்திருக்கு மென்பதில் ஐயமில்லை. பேட்டியில் வைஸ்ராய் கூறிய கடைசி வசனங்களென்ன தெரியுமா? "இப்படி மனத்தில் உறைக்கத் தக்க விதத்தில் நம் முன்னே தோன்றி அபிப்பிராயத்தைத் தெரிவித்ததற்காக வந்தனம்" என்றாராம். அங்கு வந்திருந்த தாடி, மடி ஸஞ்சி முதலிய கண்காக்ஷிகளைக் கண்டு வில்லிங்டன் மனது திகைத்து விட்டது போலும்!

கோயில்களை அழிப்பதா?

(மகாத்மா காந்தி)

"கோயில்களுக்குள் மடக்கி வைக்கப்பட்ட காலத்திலிருந்து மதம் தன்னுடைய மகிமையை இழந்து விட்டது. சத்தியமே தெய்வமாக அமர்ந்திருக்கும் கோயில்கள், ஒரு சிலரின் ஏகபோக உரிமைகளாக இருந்து வருகின்றன. ஆகவே ஹிந்துக் கோயில்கள் மாதா கோயில்கள், மசூதிகள் இவற்றை நான் மதத்திற்கு எதிரான ஸ்தாபனங்களாகக் கருதுகிறேன். ஆதலால் ஹரி ஜனங்கள் கோயில் பிரவேச அநுமதி பெறுவதால் லாபம் இல்லை"

என அமெரிக்க நிருபர் ஒருவர் எனக்கு எழுதியிருக்கிறார்.

புரோகிதர்களில் சிலர் மோசமான வாழ்க்கையை நடத்துவதென்னமோ உண்மையே. கோயில்கள், மாதா கோயில்கள், மசூதிகள் ஊழல் நிரம்பியனவாயிருப்பதும் வாஸ்தவமே. ஆயினும் எல்லாப் புரோகிதர்களும் கேவலமாக விருக்கின்றனர் என்றோ, எல்லாக் கோயில்களும் ஊழல் மிகுந்தவை யென்றோ ஒரே யடியாகச் சொல்லி விட முடியாது. ஆண்டவனை ஓரிடத்தில் வைத்து வணங்காமல் எந்த மதமும் உயிர் பெற்றிருக்க முடியாது.

கல்லால் எழுப்பப்பட்டுள்ள கோயில்கள் மனிதக் கோயில்களின் ஒரு விரிவே யன்றி வேறல்ல. இது வரையில் எந்த மதாச்சாரியரும் கோயில்களை அழிக்க முற்பட்டாரில்லை. கோயில்களிலும், சமூகத்திலும் உள்ள ஊழல்களைக் களையவே அவர்கள் பாடுபட்டனர்.

பல வருஷங்களாக நான் கோயிலுக்கே செல்வதில்லை. ஆனால் முன்னை விட நான் இப்பொழுது மேல் நிலையை அடைந்து விட்டதாகக் கூற முடியாது. என் தாயார் கோயிலுக்குப் போகாமல் ஒரு நிமிஷம் கூட இருந்ததில்லை. என் பக்தியை விட அவளுடைய பக்தி பரிபூரணமானதாக விருக்கலாம். கோயில்களின் மூல்யமாகவே லக்ஷக் கணக்கானவர்களிடம் ஈசுவர பக்தி பெருகி வருகின்றது.

மத வளர்ச்சிக்குக் கோயில்கள் அத்யாவசியமானவை; ஆதலால் தான் பல சிநேகிதர்களின் நட்பையும், ஜனங்களின் விசுவாசத்தையும், மதிப்பையும் நான் இழந்து வருவதையும் சற்றும் பொருட்படுத்தாது நான் ஹரி ஜனக் கோயில் பிரவேசத்தை வற்புறுத்தி வருகிறேன். கோயில்களின் ஊழல்களைப் போக்க வேண்டிய தவசியமே. ஆனால் கோயில்களையே அழித்து விடுவது ஆண்டவனையும், மதத்தையுமே நிராகரிப்பதாகும். —"ஹரிஜனம்".

உயர்வா? சேவையா?

பி. ஏ. பட்டம் பெற்ற ஒருவர் மகாத்மாஜிக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார். "மனித வர்க்கத்துக்குத் தீண்டாமை அவசியமே; உலகிலுள்ள எல்லா மதங்களும் இதை அனுஷ்டித்து வருகின்றன என்று தாங்கள் அடிக்கடி கூறி வருவதன் அர்த்தமென்ன?" என்று அவர் கேட்டிருக்கிறார்.

இதற்கு மகாத்மாஜி "ஹரி ஜனம்" மூலம் பதில் தந்திருக்கிறார். அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

"நாம் மல, ஜல விசர்ஜனங்களைச் செய்யுங் காலத்திலும், அசுத்தமான உடைகளை யணிந்திருக்கும் சமயத்திலும் தீண்டத்தகாதவர்களாகவே யிருக்கிறோம். சுத்தமான நிலையை நாம் அடைந்தவுடன் தான் பிறர் நம்மைத் தீண்ட முடியும். இத்தகைய தீண்டாமையும், சுத்தமாவதற்கான வழிகளும் பல தேசங்களில் பல விதமாக விருக்கின்றன. ஆனால் இந்த விஷயம் சம்பந்தமான தீண்டாமை அதிகமாகவோ, குறைவாகவோ, ஒவ்வொரு தேசத்திலும் இருக்கவே செய்கின்றது. காட்டுமிராண்டிகளிடையே கூட இது இருக்கின்றது. இதைப் புத்திசாலித்தனமாக அனுஷ்டித்தால் இது நல்ல சுகாதார விதியாக விளங்கும்.

"ஆனால் நவீன ஹிந்து மதம் என்ன செய்திருக்கிறது? பிறப்பு காரணமாகவே ஒருவனைத் தீண்டத் தகாதவனுக்கி விட்டது; முன் ஜென்மத்தில் அதிக பாவம் செய்ததாலேயே அவர்கள் தீண்டத் தகாதவர்களாகப் பிறந்திருக்கின்றனர் என்றும் கூறுகின்றது. இதை விட பெரிய விபத்தும் உண்டா?

மேற்படி நண்பர் இன்னொரு கேள்வியும் கேட்டார். "தங்களுடைய வர்ண தர்மப் பிரகாரத்தால் எல்லா ஜனங்களும் சமூக அந்தஸ்தில் என்னமாக உயர் நிலையை அடைய முடியும்? அவனவன் அவனவனுக்கு வேண்டிய தொழிலைச் செய்ய உரிமை வேண்டாமா?"

காந்திஜியின் பதில்: "சமூக அந்தஸ்தில் உயர்வு பெறுவதற்காக மனிதன் தன் தொழிலைப் பொறுக்கிக் கொள்வது தர்மமாகாது. தன் சகோதரர்களுக்குச் சேவை புரிந்தே மனிதன் பிழைக்க வேண்டும். இவ்வெண்ணத்தி லிருந்து நோக்கினல் தொழிலில் உயர்வு தாழ்வு ஏது? அழியும் தருவாயிலுள்ள உலகைக் காக்க வல்லது வர்ணசிரம தர்மம் தான்."

நமது குறிப்புகள்

"தாம் தடாகா தாம்"

'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே'. கல்கத்தாவில் காங்கிரஸ் கூடக் கூடா தென்பதற்காக சர்க்கார் பகிரதப் பிரயத்தனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்ட வரவேற்புக் கமிட்டி சட்ட விரோதமானதென்று வங்காள கவர்ன்மெண்டு உறுமி விட்டது. வங்காள சர்க்காரை 'தாம்தடாகா துரைத்தனம்' என்றே சொல்ல வேண்டும். இந்த மகா சக்தி வாய்ந்த துரைத்தனம் ஒரு வரவேற்புக் கமிட்டியிடம் பயப்படுவானேனென்பது விளங்கவில்லை. காங்கிரஸோடு பிரிட்டிஷாருக்கு சமாதானம் ஒரு போதும் ஏற்படா திருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையையும் சில்லரை தேவதைகள் செய்து கொண்டிருக்கின்றன. இவர்கள் செய்யும் காரியங்கள் பிரிட்டிஷ் துரைத்தனத்துக்கே இடையூறாக முடியுமென்பதை ஜான் புல் என்றைக்குத்தான் அறிவானோ!

வெற்றிலைக்கு வரியா?

பம்பாய் சர்க்காருக்குப் புகையிலை மீது காரமேற்பட்டது. உடனே அதன் மீது அதிக வரி போட்டார்கள். அங்குள்ள கலால் இலாகாக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும் சரக்குகளில் புகையிலையும் ஒன்று! இப்போது வங்காள துரைத்தனத்தின் கீழ் வெற்றிலைக்கும் ஸ்பெஷல் வரி போட வேண்டுமென்று ஏற்பாடாகி வருகிறதாம். கள், கஞ்சா முதலிய சாமான்களோடு வெற்றிலையும் இனி கலால் இலாகாவின் சரக்காகி விடும். கும்பகோணத்திலுள்ள வெற்றிலைக் கொடிக்கால் காரர்கள் தங்கட்கும், ராஜீயத்துக்கும் சம்பந்த மில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் ராஜீய ஞானம் ஏற்பட வேண்டுமென்ற கருணை பொங்கி சென்னை மாகாணத்திலும் வெற்றிலை வரியைப் போட சர்க்கார் முயல்வார்களென்று ஒரு பல்லி சொல்கிறது.

"கறுப்புக் காகிதம்!"

"நமது அதிகாரத்தை இந்தியாவில் தொலைத்து விடுவார்கள் போலிருக்கிறதே! இந்த வெள்ளைக் கடுதாசியை கறுப்புக் கடுதாசியென்றே சொல்ல வேண்டும்" என்று சீமையில் 'மார்னிங் போஸ்டு' என்ற சர்ச்சில் கோஷ்டி பத்திரிகை உறுமி யிருக்கிறது. இந்தியாவில் மிதவாதத் தலைவரான சிந்தாமணியார் நடத்தும் 'லீடர்' பத்திரிகை, "துளியேனும் இந்தியனுக்கு அதிகாரம் தராத இந்த வெள்ளைக் கடுதாசி, கரிய மேக மூட்டத்தையே பலப்படுத்தி விட்டது" என்று எழுதி யிருக்கிறது. ஆகவே இப்போது இந்தியா மந்திரியான ஸாமுயேல் ஹோர் என்ன செய்யப் போகிறார்? சர்ச்சில் கோஷ்டி, சிந்தாமணி கோஷ்டி எல்லாருடைய வசவு மாரிக்கும் காரணமாகி, "நாம் ஏன்டா இந்தக் கடுதாசியை வெளியிட்டோம்" என்று வருந்துகிறார் போலும்! ஆப்பைப் பிடுங்குவானேன்? அகப்பட்டு விழிப்பானேன்?

"வோட் வாங்கலையோ வோட்!"

"பிரிட்டிஷ் இந்தியாவில் சுமார் 70 அல்லது 80 லக்ஷம் பேர்களுக்கு வோட்டுரிமை கொடுக்கப்படும். இது வரை 21 ஆண்களுக்கு 1 பெண் வீதமே வோட்டுரிமை இருந்து வந்திருக்கிறது. இனி 7 ஆண்களுக்கு ஒரு பெண் வோட்டுரிமை பெற்றிருப்பர். எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களுக்கும் வோட்டுரிமை கொடுக்கப்படும். 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே வோட் உண்டு. முனிஸிபாலிட்டிக்கு 3 ரூபா வருமான வரி தருபவர்களுக்கும், 60 ரூபா வீட்டு வாடகை தரும் சென்னை வாஸிக்கும், அஸ்ஸெம்பிளி வோட் உண்டு" என்று வெள்ளைக் கடுதாசி பறை யடிக்கின்றது.

அதிகார மேதுமில்லாத அங்கத்தினர்களை அனுப்புவதற்காக, வோட்டர் ஜாப்தா பெரிதானு லென்ன, ஆகாது போனுலென்ன? ஒதிய மரம் தடிப்பதால் என்ன பிரயோஜனம்?

"என்ன ஒற்றுமை! என்ன ஒற்றுமை!"

சென்னைச் சட்ட சபையின் அங்கத்தினர்கள் கொஞ்சமேனும் அபிப்பிராய பேத மின்றி, கக்ஷி வித்யாசங்களுமின்றி, ஒரு விஷயத்தில் ஒரே முகமாக அபிப்பிராயப்பட்டுப் பேசினார்கள். அதாவது சட்ட சபை அங்கத்தினர்களின் பிரயாணச் செலவுத் தொகைகளை உயர்த்த வேண்டு மென்ற கோரிக்கை வந்த போது அத்தனை அங்கத்தினர்களும் சேர்ந்து அந்த கோரிக்கையை ஆதரித்துப் பேசினார்கள். காசு என்றால் அங்கத்தினர்களுக்குள் என்ன ஒற்றுமை! என்ன ஒற்றுமை!

சீமைச் செய்திகள்

"சால் ஜாப் பட்லர்!"

'நீ தான் சொல்லேன்' என்று கேட்டால் 'அவனைக் கேளு' என்று சொல்பவனை தட்டிக் கழிக்கின்றவனென்றே சொல்ல வேண்டும். டாக்டர் ஆலம் அவர்கள் தென்னுப்பிரிக்கா செல்வதாகவும், இந்தியர் மகா நாட்டில் தலைமை வகிப்பதாகவும் ஏற்பாடாகி இருந்தது. ஆனல் டாக்டர் ஆலத்திற்கு 'பாஸ்போர்ட்' தர ஆப்பிரிக்க சர்க்கார் மறுத்து விட்டார்கள். "இப்படி மறுத்ததற்கு காரணமென்ன?" என்று பார்லிமெண்டில் ஒருவர் இந்திய உதவிக் காரியதரிசியான பட்லரைக் கேட்டார். அப்போது அவர் காரணத்தைச் சொல்லாமல் "இந்திய துரைத்தனம் தான் பதில் சொல்ல வேண்டும்" என்று சால் ஜாப்பு சொல்லி விட்டார். குப்பனைக் கேட்டால் சுப்பனைக் கேள் என்பதும்; சுப்பனைக் கேட்டால் குப்பனைக் கேள் என்பதும் நல்ல தந்திரங்களையா!

பார்லிமெண்டில் தடபுடல்

பிரிட்டிஷ் இராணுவச் செலவைப் பற்றி பார்லிமெண்டில் வாதம் நடந்து கொண்டிருந்த போது திடீரென ஓர் இள மங்கை தோன்றினள். "உலகில் யுத்தங்கள் ஒழிக!" என்ற துண்டு ப்ரசுரங்களை வாரி வாரி அவள் சபையில் எறிய ஆரம்பித்தாள். அதே சமயத்தில் காலரியில் குந்தியிருந்த பலர் "உலகில் யுத்தம் ஒழிக!" என்று பெருத்த ஆரவாரம் செய்தார்கள். என்ன செய்தாலென்ன? மிருக பலத்தில் பித்தம் கொண்ட பிரிட்டன் தனது இராணுவச் செலவை குறைக்கப் போவதேயில்லை. ஏனெனில் பிரிட்டனின் ஏகாதிபத்திய உணர்ச்சியும், யுத்தத் திமிரும் ஒன்றோடொன்று உராய்ந்து கொண்டு உலவுகின்றன அல்லவா?

ருஷியா—பிரிட்டன் கசப்பு

ருஷிய அரசாங்கம் சில ஆங்கிலேயர்களைக் கைது செய்து, 'அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றார்க'ளென்ற குற்றம் சாட்டி வழக்கை நடத்தி வருகிறது. அக் குற்றத்துக்கு மரண தண்டனை கூட விதிக்கலாமாம். இந்தச் செய்தியைக் கேட்டு கைதியான ஆங்கிலேயர்களுக்காகப் பரிந்து கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் ருஷியாவைக் கேள்விகள் கேட்டிருக்கிறதாம். பதில் கிடைக்காது போனல் இரண்டு நாடுகளுக்கும் கசப்பு அதிகமாகு மென்று ராஜீய வாதிகள் சொல்லுகின்றனர். இந்தக் கசப்பு எந்த எல்லையில் போய் நிற்குமோ?

நாயரே! வேக எணிக்கின்!

பல்லாரி சிறையில் தேச பக்தர்கள் மறுபடியும் துயரங்களுக்குட் படுத்தப் படுவதாக நமக்கு செய்தி கிடைத்திருக்கிறது. அந்தச் சிறையில் தான் போன செப்டம்பர் மாதத்தில் பயங்கரமான சவுக்கடி தர்பார் நடந்தது. பிறகு அங்கு வந்த மிஸ்டர் சங்கர் என்ற சூப்ரண்டு தேச பக்தக் கைதிகளை கொஞ்சம் கௌரவமாக நடத்தி வந்தாராம். கைதியின் உடல் நிலைமைக் கேற்ற வண்ணம் துணி நெய்தல் போன்ற கைத் தொழில்களைக் கொடுத்து வந்தாராம். இப்போது டாக்டர் இன்ஸ் என்ற பேர்வழி சூப்ரண்டாக வந்திருக்கிறாராம். எண்ணெய்ச் செக்கு இழுக்கும் வேலையும், கல்லுடைக்கும் வேலையும் காங்கிரஸ் கைதிகளுக்குக் கொடுக்கப் படுகின்றதாம். பின்னல் வரப் போகும் சவுக்கடி ராஜ்யத்துக்கு செக்கடி தர்பார் தான் 'சுக்லாம் பரதர'மோ? ஒரு நாளைக்கு ஒரு கைதி சூப்ரண்டு துரை தமது திருக்கையினலேயே அடித்தாராம்! ஜெயில் இலாகாவை நிர்வகிக்கும் ஹே கிருஷ்ணன் நாயரே! உறங்கியது மதி! வேக எணிக்கின்! பல்லாரியை நோக்கட்டே!

"மேலோர்கள் வெஞ் சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையோ?"

ஹரிஜன விமோசனம்

பரேலி என்னு மிடத்தில் நடந்த ராம லீலா உத்ஸவத்தன்று 15 ஆயிரம் பேர்கள் அடங்கிய ஊர்வலத்தில் ஏராளமான ஹரி ஜனங்கள் கலந்து கொண்டு மஞ்சள் நீர் விளையாட்டு விளையாடினர்களாம்.

பவநகர் சமஸ்தானத்தில் உள்ள பள்ளிக்கூடங்கள் ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப் பட்டன. பிரபாசங்கர் பட்டாணி ஹரிஜனங்களின் கல்விக்காக ரூ. 500 நன் கொடையளித்திருக்கிறர். ஆஸ்பத்திரிகள் கூட ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப் பட்டனவாம்.

ராஞ்சியில் நடந்த ஹரிஜன சேவா சங்கத்தின் கூட்டத்தில் பலர், தினம் குளிப்பதாகவும், வீடுகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதாயும், குடியை நிறுத்தி விடுவதாயும், செத்த மாட்டு மாமிசத்தைத் தின்பதில்லையென்றும் சபதம் செய்தனராம்.

பொறுக்கிய புஷ்பங்கள்

தூத்துக்குடியில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ஒருவருக்கு 4 மாதம் தண்டனை.

சேலத்தில் 5 காங்கிரஸ்காரர்களின் வீடுகள் சோதனை யிடப்பட்டதில் சில காங்கிரஸ் பிரசுரங்கள் கைப்பற்றப் பட்டன.

கும்பகோணத்தில் நடந்த மகாமகத்தன்று ரயில்வே ஸ்டேஷனில் நிமிஷத்துக்கு 300 ரூ. வீதம் டிக்கட்டு விற்பனையாயிற்றாம்.

கள்ளிக்கோட்டையில் ‘கண்ணனூர் கைதிகள் தினம்’ கொண்டாடுவதற்காகக் கூடி பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது 4 பேர்களைப் போலீசார் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

கண்ணனூரில் “ஜெயில் தினம்.” “கேரள காங்கிரஸ் வார தினம்” முதலியன கொண்டாடப்பட்டன. துண்டுப் பிரசுரங்கள் வழங்கிக் கொண்டும், ஊர்வலம் நடத்திக்கொண்டும் ரெயில்வே ஸ்டேஷனுக் கருகில் செல்லும் போது 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

நவாப் கஞ்சில் ‘தாண்டி தின’ சம்பந்தமாக கூட்டம் நடத்த உத்தேசித்திருந்ததற்காக இருவர் கைது செய்யப்பட்டனர்.

பெஷாவரில் ஊர்வலம் நடத்தியதற்காக செஞ்சட்டையினர்களில் 6 பேருக்கு தலா 1 ½ வருஷமும், இருவருக்கு 6 மாதமும் தண்டனை.

பழுத்த மிதவாதிகளான செதால்வட், ஜெயக்கர், சாக்ளா முதலியோர் வெள்ளைக் கடுதாசியைக் கண்டு ஏக்கமும், ஏமாற்றமுமடைந்திருக்கின்றனர்.

ஆமதாபாத்தில் பகிஷ்கார சம்பந்தமாக பிரசங்கம் செய்ததற்காக சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு முகம்மதியருக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை.

பகல்பூரில் விதேசி ஜவுளிக் கடை மறியல் செய்த தொண்டர்களில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

டெல்லியில் உள்ள “முராரி பைன் ஆர்ட் பிரிண்டிங் பிரஸ்” காலஞ் சென்ற தியாகி யதீந்திரநாத தாஸின் பிளாக்கை வைத்திருந்ததற்காக 2000 ஜாமீன் கேட்கப் பட்டிருக்கிறது.

பம்பாயில் வேலை யில்லாமலிருக்கும் தொழிலாளர்களில் 30 பேர் சேர்ந்து கொண்டு “பட்டினி, சோறு போடுங்கள்” என்று கத்திக் கொண்டு கார்ப்பொரேஷன் ஹாலில் பிரவேசித்தார்களாம்.

பம்பாயில் சட்ட விரோதமான சபையைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகக் கைது செய்யப் பட்டிருந்த பாரிஸ்டர் ஏ. கே. அமீனுக்கும்,இதர 13 பேர்களுக்கும் தலா 6 மாதக் கடுங்காவல். இவர்களில் 12 பேர்களுக்குச் சட்ட விரோதமான கூட்டத்தைக் கூட்டியதற்காக 2 வருஷக் கடுங் காவல்.

ராஜாஜி, மாளவியாஜி, ஆனே மூவரும் வெகு சீக்கிரத்தில் காசியில் ஒன்று கூடுவரென்றும், அடுத்த காங்கிரஸைப் பற்றியும், வெள்ளைக் கடுதாசியைப் பற்றியும் கலந்து ஆலோசிக்கலா மெனவும் தெரிகின்றது.

கான்பூரில், சென்ற வருஷ சட்ட மறுப்பியக்கத்தில் சர்வாதிகாரியா யிருந்த குரு ரகுவர தயால் என்பவரின் அபராதத் தொகைக்காக, இப்பொழுது அவர் படிக்கும் விடுதியில் போலீசார் புகுந்து அவரது படுக்கையையும், கட்டிலையும் ஜப்தி செய்தனர்.

ஜப்பான் துணிகள் வருவதை நிறுத்தா விட்டால் இந்திய மில் தொழில் நசித்து விடுமென்றும், உடனே அதற்கான பரிகாரம் தேட வேண்டுமென்றும் ஆமதாபாத் மில் சொந்தக்கார சங்கத்தார் சர்க்காருக்கு தந்தி கொடுத்திருக்கின்றனர்.

சாப்ராவில் ஒரு ஹரிஜன வாலிபன் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும்போது ஆழத்தில் மூழ்கி விடவே பக்கத்திலிருந்த 200 மேல் ஜாதிக்காரரில் எவரும் குளத்தில் இறங்கி உதவி செய்ய முன் வரவில்லையாம். ஹரி ஜன வாலிபன் இறந்து போனான். இதுவா ஸநாதன தர்மம்?

காசியில் அன்னபூர்ணா வைத்திய சாலையைச் சென்ற புதனன்று நடுநிசியில் போலீசார் பரிசோதித்ததில் யாதொன்றும் அகப்பட வில்லையாம். நரசிங்க தாஸ் என்பவரின் வீட்டை அவரில்லாத சமயத்தில் சோதனை யிட்டு சில புத்தகங்களை போலீசார் கைப்பற்றினர். மூவர் கைது செய்யப்பட்டனர்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.